RESEARCH ARTICLE

DOI: 10.34256/irjt21s141

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL

சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்



OPEN ACCESS

# திருக்குறளில் மனித உரிமைகள் - ஓர் ஆய்வு

ப. விக்னேஸ்வரி [அ, *]

[அ] தமிழ்த்துறை, நேரு கலை அறிவியல் கல்லூரி, கோயம்புத்தூர்- 641105. தமிழ்நாடு, இந்தியா

# Thirukkuralil manitha urimaigal - A Study

P. Vigneshwari [a, *]

[a] Department of Tamil, Nehru Arts and Science College, Coimbatore-641105, Tamil Nadu, India

* Corresponding Author: vigneshwari.cbe@gmail.com

Received: 04-11-2020
Revised: 18-06-2021
Accepted: 21-06-2021
Published: 23-06-2021

## ABSTRACT

Thiruvalluvar is proud to know and clearly express the ability of the guaranteed objects of virtue, meaning, pleasure and home required for human society. It is a great honor for him that Thiruvalluvar became famous for singing the flute during his lifetime. He is credited with compiling a wonderful book, Thirukkural, which summarizes the facts he has seen and experienced in his life. The human rights mentioned in Thirukkural are an example of Thiruvalluvar's vision. Human beings discriminate between the superior and the inferior and deprive the lower castes of their rights. This leads to many tribulations. Such victims come together and claim their rights. Thirukkural, which appeared in a period of ups and downs, condemns such differences and insists that all people are equal by birth. The king says that if the people are enslaved and persecuted, his wealth will be destroyed by the tears of the people. Therefore, it is clear that the king must provide the necessary facilities for the people. Human rights law makes it clear that if a person is charged, he should be considered innocent until proven guilty. Everyone has the right to freedom of opinion and expression. Anyone who asks for something should explore its true meaning without accepting it as it is. The eye is important to every living thing in the world. Likewise, it is important to get an eye-like education. Everyone should get the best rich education that will never be destroyed. Seeing the war for hunger, Valluvar snarls at those who subjected them to cruelty. The literature that arose for human development is Thirukkural. Thirukkural acts as a medicine wherever and however a human being is injured. If the world listens to the human rights voice of Ayyan Valluvar, there will be no war and no conflict on this soil.

**Keywords:** Thiruvalluvar, Thirukkural, Human Development, Voice of Rights

## முன்னுரை

மனித சமுதாயத்திற்குத் தேவையான அறம், பொருள், இன்பம், வீடு என்னும் உறுதிப் பொருள்களின் திறம் தெரிந்து தெளிவாக எடுத்துரைத்த பெருமை திருவள்ளுவரையே சாரும்.

பொதுவாக இவ்வுலகில் புலவராய் வாழ்ந்த சான்றோர் வரலாற்றை உற்று நோக்குமிடத்துப் பெரும்பாலும் புலவர் தம் பெருமை அவர் வாழ்நாள் முடிந்த பின்னர் நாடெங்கும் விளங்குமே அன்றி அவர் வாழுங்காலத்தில் அவர் பெருமையை அறிபவர் ஒரு சிலரே.

திருவள்ளுவர் தாம் வாழ்ந்த காலத்திலேயே புலவர் பாடும் புகழ் உடையவராய் விளங்கினாரென்பது அவருக்குப் பெருஞ்சிறப்பாகும். தன் வாழ்க்கையில் கண்டு அனுபவித்து அறிந்த உண்மைகளைத் திரட்டி திருக்குறள் என்னும் அருமையானதோர் அறநூலை உருவாக்கிய பெருமை

அவரையே சாரும். திருக்குறளில் கூறப்பட்டுள்ள மனித உரிமைகள் திருவள்ளுவரின் தொலைநோக்குப் பார்வைக்கு எடுத்துக்காட்டாகத் திகழ்கின்றன தமிழ், இலக்கியப் பரப்பின் தலைவாயிலில் நிற்கும் திருக்குறளில் கேட்கும் மனித உரிமைக் குரலை இவ்வாய்வுக் கட்டுரை ஒலிக்கிறது.

## மனித உரிமைகள்

மனிதன் பிறக்கும் போது விடுதலையாகப் பிறக்கிறான். பிறகு எப்போதும் 'சங்கிலியால் பிணைக்கப்பட்டே இருக்கிறான்' என்பார் ரூசோ. சுற்றுப்புறச் சூழல் மனிதனுக்கு கிடைக்க வேண்டிய உரிமைகளை சிலநேரம் தடுத்து விடுகிறது. அதற்கு எதிராகப் போராடுகிறான் மனிதன்.

மனிதர்கள் தங்களுக்குள் உயர்ந்தவன், தாழ்ந்தவன் என்று பாகுபாட்டை ஏற்படுத்திக் கொண்டு கீழ்மட்டத்தில் உள்ளவர்களின் உரிமைகளைப் பறிக்கின்றனர். இதனால் பல இன்னல்களை அடைய நேரிடுகின்றது. இப்படி பாதிப்புக்கு ஆளானவர்கள் ஒன்று திரண்டு தங்களின் உரிமைகளைப் பெறுகின்றனர்.

சுதந்திர இந்தியாவில் பேசவும், எழுதவும் ஒவ்வொரு தனிமனிதனுக்கும் உரிமையுள்ளது போல கல்வி கற்பதற்கும் உரிமையுண்டு. அனைவருக்கும் கல்வி என்ற கட்டாயச் சட்டத்தை அரசாங்கம் பின்பற்றி வருகின்றது.

## பிறப்பு உரிமை

மனித உரிமைச் சட்டத்தில் பிறப்புரிமை பற்றிய கருத்துக்கள் புதைந்து கிடக்கின்றது. 'பிறப்பில் யாவரும் சமம்' என்றே அய்யன் கூறுகின்றார். பிறப்பில் ஏற்றத்தாழ்வு இல்லை என்பது அய்யனின் கோட்பாடாகும்.

"பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும்" (972)

என்ற குறள் எல்லா உயிர்களும் பிறப்பால் ஒத்திருக்கின்றது என்று உணர்த்துகிறது.

'மேலிருந்தும், மேலல்லார் மேலல்லர், கீழிருந்தும்
கீழல்லார் கீழல் லவர்'' (973)

பிறப்பில் உயர்ந்தவர், தாழ்ந்தவர் என்று யாரும் கிடையாது, மேன்மை குணம் உடையவர் உயர்ந்தவர் என்றும், கீழான குணம் உடையவர் தாழ்ந்தவர் என்றும் பாவலர் கூறுகின்றார். திருவள்ளுவரின் குரலை வைத்து அக்காலச் சமுதாய அமைப்புகளை நோக்கும் போது அக்காலச் சமுதாயத்தில் அடிமை முறையும், பிறப்பினால் ஏற்றத்தாழ்வு கற்பித்தலையும் அறிய முடிகிறது (Shanmugasundaram, 1998).

உயர்வு, தாழ்வு பார்க்கப்பட்ட காலகட்டத்தில் தோன்றிய திருக்குறள் மக்களிடையே அவ்வாறு வேற்றுமை காண்பதைக் கடிந்து, மக்கள் எல்லாரும் பிறப்பால் சமம் என்றே வலியுறுத்துகிறது.

## அரசாட்சியில் மக்களின் உரிமைகள்

கொலைமேற்கொண் டாரிற் கொடிதே அலைமேற்கொண்டு
அல்லவை செய்தொழுகும் வேந்து (551)

அரசன் பொருள் மீது மிகுந்த பற்றுக் கொண்டு மக்களைத் துன்புறுத்தினால், அவன் பகைவரைவிடக் கொடியவன் என்கிறார், அரசு மக்களை அடிமை நிலையில் நடத்தக் கூடாது என்பதை உறுதியாகக் கொண்டிருந்தார் என்பது தெளிவாகிறது.

அல்லற்பட் டாற்றா தழுதகண் ணீரன்றே
செல்வத்தைத் தேய்க்கும் படை (555)

என்ற குறள் அரசன் மக்களை அடிமையாகக் கருதி துன்புறுத்தினால், அவனுடைய செல்வத்தை மக்களின் கண்ணீரே அழித்துவிடும் என்கிறார். எனவே மன்னன் மக்களுக்குத் தேவையான வசதி வாய்ப்புக்களைச் செய்து தரவேண்டும் என்பது புலனாகிறது (Shanmugasundaram, 1998).

## மனித உரிமைச் சட்டம்

மனித உரிமைச் சட்டம் தனிநபர் பாதுகாப்பை வலியுறுத்துகின்றது. சரியான காரணம் இல்லாமல் கைது செய்யவோ, சிறையிலடைக்கவோ, நாடு கடத்தவோ கூடாது என்பதை இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே இக்குறள் தெளிவுபடுத்துகிறது.

ஓர்ந்துகண் ணோடா திறைபுரிந் தியார்மட்டும்
தேர்ந்துசெய் வஃதே முறை (541)

செய்த குற்றத்தைத் தீர ஆய்ந்து, குற்றத்திற்குத் தகுந்தாற் போல தண்டனை தரவேண்டும் என்றும், முறையுள்ள தண்டனையைத் தவிர்க்க வேண்டும் என்று கூறியுள்ளார்.

ஒருவரின் மீது குற்றம் சாட்டப்பட்டிருந்தால் அவரின் குற்றம் நிரூபிக்கும் வரை அவரை குற்றமற்றவராகவே கருத வேண்டும் என்கிறது மனித உரிமைச் சட்டம் தெளிவுபடுத்துகிறது.

குணம்நாடிக் குற்றமு நாடி அவற்றுள்
மிகைநாடி மிக்க கொளல் (504)

இதனை மேற்கண்ட குறள், ஒருவரின் குணத்தையும், குற்றத்தையும் முதலில் ஆராய்ந்து அவற்றில் மிகுதியாக உள்ளதை அறிந்து முடிவுகளை எடுக்க வேண்டும். சினத்தின் காரணமாகவோ, விருப்பு வெறுப்பின் காரணமாகவோ ஒருவரை குற்றவாளி என்று கருதிவிடக் கூடாது. ஆதாரங்களை ஆய்ந்த பின்னரே அவரைப்பற்றிய முடிவுக்கு வரவேண்டும் என்கிறார் (Shanmugasundaram, 1998).

## தனிமனித உரிமைகள்

சுதந்திரமாக எண்ணுவதற்கும், பேசுவதற்கும் ஒவ்வொருவருக்கும் உரிமை உண்டு. எப்பொருளை யாரிடம் கேட்டாலும் கேட்டவற்றை அப்படியே ஏற்றுக்கொள்ளாமல் அதன் உண்மைப் பொருளை ஆராய்ந்து தெளிய வேண்டும். ஒருவர் நல்வழியை கடைபிடிப்பதற்கு சிந்தித்துச் செயல்பட வேண்டும் என்பதனை,

துறந்தார்க்கும் துவ்வா தவர்க்கும் இறந்தார்க்கும்
இல்வாழ்வான் என்பான் துணை. (42)

ஒரு கருத்தை பதவியில் உள்ள ஒருவர் கூறினால் என்பதற்காக அவற்றை அப்படியே ஏற்றுக் கொள்ளக்கூடாது. அதனை முறையாக ஆய்ந்து பார்த்து ஏற்றுக் கொள்ள வேண்டும் என்று கூறுகின்றார் (Shanmugasundaram, 1998).

## கல்வியில் உரிமை

கல்வி பெறுவது ஒவ்வொரு குடிமக்களின் அடிப்படை உரிமையாகும். கல்வி கற்பதில் உயர்ந்தவர், தாழ்ந்தவர், பால்பாகுபாடு இல்லாது அனைவருக்கும் கல்வி அளிக்க வேண்டும் என்று சட்டங்கள் உரைக்கின்றன. ஆனால் அன்றைக்கே எழுதியுள்ளார் என்பதை எண்ணும் போது பெருமையாக இருக்கின்றது.

உலகில் வாழும் ஒவ்வொரு உயிர்க்கும் கண் முக்கியமானது. அதுபோல் கண் போன்ற கல்வி அதனை பெறுவது முக்கியமானதாகும். என்றுமே அழிவு இல்லாத சிறந்த செல்வமான கல்வியை ஒவ்வொருவரும் பெற வேண்டும் என்பதனை,

எண்ணென்ப ஏனை யெழுத்தென்ப இவ்விரண்டும்
கண்ணென்ப வாழும் உயிர்க்கு (392)

கேடில் விழுச்செல்வங் கல்வி யொருவற்கு
மாடல்ல மற்றை யவை (400)

‘இளமையில் கல்’ (ஆத்திச்சூடி)

மன்னனும் மாசறக் கற்றோனும் சீர்தூக்கின்

மன்னனில் கற்றோன் சிறப்புடையோன் - மன்னர்க்குத்
தன்தேசம் அல்லால் சிறப்பில்லை கற்றோர்க்குச்
சென்ற இடமெல்லாம் சிறப்பு (மூதுரை 26)

‘எண்ணும் எழுத்தும் கண்ணெனத் தரும்’ (கொன்றை வேந்தன்)

‘கைப்பொருள் தன்னின் மெய்ப்பொருள் கல்வி (நறுந்தொகை)

குஞ்சி யழகும் கொடுந்தானைக் கோட்டழகும்
மஞ்சள் அழகும் அழகல்ல - நெஞ்சத்து
நல்லம்யாம் என்னும் நடுவு நிலைமையால்
கல்வி அழகே அழகு (நாலடியார்)

வெள்ளத்தால் போகாது
வெந்தனலால் வேகாது
வேந்தனால் கொல்லத்தான் ஆகாது
கொடுத்தாலும் நிறைவின்றி குறையாது (விவேக சிந்தாமணி)

அரும்பரிசு பிள்ளைக்கு ஆயிரம் கொடுத்தாலும்
பெரும்பரிசு கல்வி எனப் பேசுகிறது (விவேக சிந்தாமணி)

எனக் கல்வியின் சிறப்பையும், கல்வி பெறுவது தலையாய உரிமை என்பதையும் வள்ளுவமும் நீதிநூல்களும் வலியுறுத்துகின்றன. ‘கல்லாதவர் களரனையர்’ என வேதனைப்படுகிறார் (Keerthi, 2007; Krishnaswamy Mudaliar, 1914; Shanmugasundaram, 1998; Gowmareeswari, 2010).

## பசியும் வறுமையும்

நல்லவர் கண்பட்ட வறுமை மிக இன்னாதது என்பது வள்ளுவர் கருத்து. பசி, நோய், பகை இம்மூன்றும் இல்லாமல் இருந்தால் தான் நாடு சிறக்கும் என்பதனை,

உறுபசியும் ஒவாப் பிணியும் செறுபகையும் (734)
சேரா தியல்வது நாடு.

என்ற குறட்பாவாலும், பொருட்செல்வம் உடையோர் தம் செல்வத்தைப் பாதுகாப்பாக வைக்கும் இடம் பசித்தோரின் வயிறு தான் என்பதனை,

‘அற்றார் அழிபசி தீர்த்தல் அஃதொருவன்
பெற்றான் பொருள்வைப் புழி’ (226)

என்கிறார்.

பசிக்காக இரப்போரைக் கண்டு நொந்த வள்ளுவர் அவர்களை அக்கொடுமைக்கு உள்ளாக்கியவர்களைப் பார்த்துச் சீறுகிறார். இதனை,

இரந்தும் உயிர்வாழ்தல் வேண்டின் பரந்து
கெடுக உலகியற்றி யான் (1062)

என்று தெளிவுபடுத்தியுள்ளார்.

## பெண்ணின் உரிமை

ஆண்டாண்டு காலமாக அடிமைப்பட்டுக் கிடக்கும் பெண்களுக்கு விடுதலை வேண்டிப் போராடிய வீரர்கள் ஏராளம், பெண்ணின் பெருமையை போற்றியவர். 'பெண்ணிற் பெருந்தக்க யாவுள' என்ற குறளில் இருந்து பெண்களைப் போற்றியுள்ள விதத்தை உணர முடிகின்றது.

## முடிவுரை

அறிஞர்களின் கடுமையான உழைப்பினாலும் செயலாலும் இன்றைக்கு சமூகத்தில் பல வியத்தகு மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன. அடிமை முறை, தீண்டாமை முறை ஒழிய தலைவர்கள் குரல் எழுப்பியதின் பெயரால் இன்றைக்கு மக்கள் ஓரளவு சுதந்திரமாகவே வாழ்ந்து வருகின்றனர். பகுத்தறிவைக் கொண்டு அறிவியல் நெறிகளைப் பின்பற்றித் தன்னை மேம்படுத்திக் கொள்ள முடியும் என்ற எண்ணம் வலுப்பெறுகிறது. எவ்வகையான ஏற்றத் தாழ்வுகட்கும், சுரண்டலுக்கும் இடமில்லாமல் மனிதர்கள் தம்முள் ஒத்த உரிமையோடு வாழ்ந்து தங்களை முன்னேற்றிக் கொள்ள வேண்டும்.

மானுட மேம்பாட்டுக்காக எழுந்த இலக்கியம் திருக்குறள். எங்கு, எப்படி மானுடம் காயப்படுமோ அங்கெல்லாம் மருந்தாகச் செயல்படுகிறது திருக்குறள். அய்யன் வள்ளுவரின் மனித உரிமைக்குரலை உலகம் கேட்டுச் செயலாற்றினால், இந்த மண்ணில் போரும் இருக்காது, பூசலும் ஏற்படாது.

## References

Gowmareeswari, S., (2010) Naladiyar Thelivurai, Saradha Pathippagam, Chennai, India.

Keerthi, (2007) Avvaiyar aathichudi, Aruna Publications, Chennai, India.

Krishnaswamy Mudaliar, (1914) Viveka sinthamani moolamum uraiyum, Dhanalakshmi Pathippagam, Chennai, India.

Shanmugasundaram, S., (1998) Thirukkural: Kaavya Urai, Kaavya Pathipagam, Bangalore, India.

**Funding:** NIL

**Acknowledgement:** NIL

**Conflict of Interest:** NIL

**About the License:**

Attribution 4.0 International (CC BY 4.0)

© The author 2021. The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License